செ.வெ.எண். 17/பிப்ரவரி தேதி : 06.02.2017

# தருமபுரி மாவட்டம், அவ்வையார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மீசல்ஸ் - ருபெல்லா தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.



தருமபுரி மாவட்டம், அவ்வையார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மீசல்ஸ் - ருபெல்லா தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.02.2017) துவக்கி வைத்தார்.

தருமபுரி மாவட்டத்தில், மீசல்ஸ்,ருபெல்லா ஆகிய இரு நோய்களையும் தடுப்பதற்காக 9 மாதம் முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள்,மாணவர்கள் மற்றும் மாணவிகள் அனைவருக்கும் மீசல்ஸ் - ருபெல்லா தடுப்பூசி போடப்பட உள்ளது. தட்டம்மை, பாரோமைக்சோ வைரஸால் உண்டாகும் மிகவும் பரவக்கூடிய, ஒரு மூச்சு மண்டல தொற்று நோயாகும். இது மணல்வாரி அம்மை என்றும் அழைக்கப்படும். நோயுள்ள ஒருவரின் மூக்கு,வாய்,தொண்டைச் சளியின் மூலமாக இது பரவுகிறது. ருபெல்லா, ஜெர்மானிய மணல்வாரி அம்மை எனப்படுகிறது. இது காற்றில் பரவும் தன்மை கொண்டது. குழந்தைகளை மட்டுமல்லாது பெரியவர்களைக் கூட இது தாக்கும். இந்த நோயினால் கர்ப்பிணிகள் பாதிக்கப்பட்டால் பிறக்கும் குழந்தைகளுக்கு காது கேளாமை,கண் புரை,இருதய நோய் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் 3153 மையங்களில் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை தடுப்பூசிகள் போடப்பட்டு மாலை 4 வரை அனைத்து குழந்தைகளும் கண்காணிக்கப்படுவர். 9 மாதம் முதல் 15 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் அனைத்து அரசு பள்ளிகள்,அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளிலும் மேலும் அனைத்து துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஊட்டச்சத்து மையங்களிலும் இந்த முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இந்த தடுப்பூசி முகாம்களுக்காக பல்வேறு துறைகளைச் சார்ந்த 269 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். தருமபுரி மாவட்டத்தில் சுமார் 376700 குழந்தைகளுக்கு மீசல்ஸ்- ருபெல்லா தடுப்பூசி போடப்பட உள்ளது. இந்த முகாம்களுக்குத் தேவையான தடுப்பூசி மருந்து குளிர்பதன நிலையில் தயாராக உள்ளது.

மீசல்ஸ், ருபெல்லா ஆகிய இரு நோய்களையும் தடுப்பதற்காக மீசல்ஸ்-ருபெல்லா தடுப்பூசி போடப்பட உள்ளது. இதற்கு முன்பு இந்த வகை தடுப்பூசி போட்டிருந்தாலும் மீசல்ஸ்-ருபெல்லா தடுப்பூசியை போட்டுக் கொள்ள வேண்டும். பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி தங்கள் குழந்தைகளை மீசல்ஸ்,ருபெல்லா நோய்களிலிருந்து பாதுகாக்கும்படி மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு. ஜெகதீஸ்குமார், வட்டார மருத்துவ அலுவலர் மரு. சுவீந்தர், நேர்முக உதவியாளர் மரு. பூவிழி மற்றும் செவிலியர்கள், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.